**D.V.O.P. 1/2017** **25.10.2019**

**எ.ம.சா.2.பாண்டி**

**குறுக்கு விசாரணை:**

நானும் எதிர்மனுதாரரும் உறவினர்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எதிர்மனுதாரர் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நானும் விபரங்கள் சொன்னேன். நான் இந்த வழக்கை தவிர வேறு வழக்குகளில் சாட்சி சொல்லுவது வழக்கமாக கொண்டுள்ளேன் என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு அடிக்கடி சென்று வருவேன் என்றால் என் மனைவி ஊராட்சிமன்ற தலைவர் என்ற காரணத்தினால் பிரச்சினை ஏற்படும்போது என்னை காவல் நிலையத்திற்கு அழைப்பார்கள். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடப்பதற்கு முன்பு நடைபெற்ற நிச்சயதார்த்து விழாவில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல நானும் கலந்துகொண்டேன். மனுதாரரின் பெற்றோர்கள் திருமணத்தின்போது மனுதாரருக்கு எவ்வளவு நகை கொடுத்தார்கள் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் போன்ற விபரங்கள் எதிர்மனுதாரர் சொல்லி தான் எனக்கு தெரியுமென்றால் சபையில் பேசியதால் எனக்கும் தெரியும். முதல் குழந்தை பிறந்த பிறகு மனுதாரரும் எதிர்மனுதாரும் எதிர்மனுதாரரின் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட வீட்டில் வாடகை கொடுத்த தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தார்கள். எதிர்மனுதாரரும் மனுதாரரும் எதிர்மனுதாரர் பெற்றோர்களுடன் கடந்த 25.06.2016 ஆம் தேதிவரை கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள் என்றும் எதிர்மனுதாரர் எனது உறவினர் என்ற காரணத்தினால் அவர்கள் தனிக்குடித்தனமாக வாழ்ந்து வந்தார்கள் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு நடந்த நிச்சயதார்த்த விழாவில் கலந்து கொள்ளவில்லை என்றும் எதிர்மனுதாரருடன் எனக்கு தற்போது ஏற்பட்ட பழக்கம் காரணமாக நான் நிச்சயதார்த்தத்திற்கு சென்றேன் என்றும் அதில் 10 பவுன் நகையும் ரூபாய் 50 ஆயிரம் பணம் மட்டும் தான் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் ஊரில் வைத்து பஞ்சாயத்து பேசிய வகையில் அதில் நான், பாண்டையா, தனுஷ்கொடி, மற்றொரு பாண்டி, சிதம்பரம், விஜயகுமார் மற்றும் பலர் என மொத்தம் 10 நபர்கள் கலந்து கொண்டோம். மனுதாரர் தரப்பில் அவர் பெற்றோர் மற்றும் 8 நபர்கள் இருந்தார்கள். மனுதாரர் அப்பா பெயர் சுப்பிரமணி அவரது அம்மா பெயர் எனக்கு தெரியாது. மனுதாரரின் குழந்தைகளை 3 வருடங்களுக்கு முன்பு உத்தப்பநாயக்கனூரில் பார்த்தேன். மனுதாரின் பெற்றோர் தோட்டத்தில் போர்வெல் போடுவதற்கு பணம் கொடுத்த விபரம் பற்றி எனக்கு எதிர்மனுதாரர் சொல்லி தான் தெரியுமென்றால் சரியல்ல எனக்கு நேரடியாக தெரியும் நான் ரூபாய் 2 லட்சம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்து தான் போர் போடப்பட்டதா என்றால் நான் கொடுத்த பணம் மற்றும் வேறு பணத்தை கடன் வாங்கி போர் போட்டார். மனுதாரரும் எதிர்மனுதாரரும் உத்தப்பநாயக்கனூரில் உள்ள வீட்டில் குடியிருந்து விவசாயம் செய்தார்கள்

என்று சொன்ன வகையில் எவ்வளவு காலம் அவ்வாறு குடியிருந்து வந்தார்கள் என்றால் சுமார் 6 வருடங்கள் அவ்வாறு குடியிருந்து வந்தார்கள். அவர்கள் உத்தப்பநாயக்கனூரில் குடியிருந்து வரவில்லை என்றும் போலக்காபட்டியில் உள்ள எதிர்மனுதாரர் பெற்றோர் வீட்டில் தான் கடந்த 25.06.2016 ஆம் தேதி வரை குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் மல்லிகை பூ தோட்டத்திற்கும் எவ்வித சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு எதிர்மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகாமல் தன் செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி புகார் மனுவை விசாரணை நடக்கவிடாமல் தடைசெய்தார் என்றால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் பொய் என்றும் எதிர்மனுதாரர் எனக்கு உறவினர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.